ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 2.3 – விற்பெருவிழவும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.3 – விற்பெருவிழவும்

‡ விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் ⋆
வேழமும் பாகனும் வீழச் ⋆
செற்றவன் தன்னை புரம் எரி செய்த ⋆
சிவன் உறு துயர் களை தேவை ⋆
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு ⋆
பார்த்தன் தன் தேர் முன் நின்றானை ⋆
சிற்றவை பணியால் முடி துறந்தானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.1** ‖

வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை ⋆
விழுமிய முனிவர் விழுங்கும் ⋆
கோதில் இன் கனியை நந்தனார் களிற்றைக் ⋆
குவலயத்தோர் தொழுதேத்தும் ⋆
ஆதியை அமுதை என்னை ஆள் உடை அப்பனை ⋆
ஒப்பவர் இல்லா மாதர்கள் வாழும் ⋆
மாட மா மயிலைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.2** ‖

வஞ்சனை செய்யத் தாய் உருவாகி ⋆
வந்த பேய் அலறி மண் சேர ⋆
நஞ்சமர் முலை ஊடுயிர் செக உண்ட நாதனைத் ⋆
தானவர் கூற்றை ⋆
விஞ்சை வானவர் சாரணர் சித்தர் ⋆

வியந்துதி செய்யப் பெண் உருவாகி ⋆
அஞ்சுவை அமுதம் அன்றளித்தானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.3** ‖

இந்திரனுக்கென்றாயர்கள் எடுத்த ⋆
எழில் விழவில் பழ நடை செய் ⋆
மந்திர விதியில் பூசனை பெறாது ⋆
மழை பொழிந்திடத் தளர்ந்து ⋆
ஆயர் எம் தம்மோடின ஆநிரை தளராமல் ⋆
எம் பெருமான் அருள் என்ன ⋆
அந்தம் இல் வரையால் மழை தடுத்தானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.4** ‖

இன் துணைப் பதுமத்தலர்மகள் தனக்கும் இன்பன் ⋆
நற் புவி தனக்கிறைவன் ⋆
தன் துணை ஆயர் பாவை நப்பின்னை தனக்கிறை ⋆
மற்றையோர்க்கெல்லாம் வன் துணை ⋆
பஞ்ச பாண்டவர்க்காகி ⋆
வாய் உரை தூது சென்றியங்கும் என் துணை ⋆
எந்தை தந்தை தம்மானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.5** ‖

அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கிளையவன் ⋆
அணி இழையைச் சென்று ⋆
எந்தமக்குரிமை செய் எனத் தரியாது ⋆
எம் பெருமான் அருள் ! என்ன ⋆
சந்தம் அல் குழலாள் அலக்கண் ⋆
நூற்றுவர் தம் பெண்டிரும் எய்தி நூல் இழப்ப ⋆

இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ॥ **2.3.6** ॥

பரதனும் தம்பி சத்துருக்கனனும் ⋆
இலக்குமனோடு மைதிலியும் ⋆
இரவும் நன் பகலும் துதி செய்ய நின்ற ⋆
இராவணாந்தகனை எம்மானை ⋆
குரவமே கமழும் குளிர் பொழில் ஊடு ⋆
குயிலொடு மயில்கள் நின்றால ⋆
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ॥ **2.3.7** ॥

‡ பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் ⋆
வாயில் ஓர் ஆயிர நாமம் ⋆
ஒள்ளிய ஆகிப் போத ஆங்கதனுக்கு ⋆
ஒன்றும் ஓர் பொறுப்பிலன் ஆகி ⋆
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப் ⋆
பிறை எயிற்றனல் விழி பேழ்வாய் ⋆
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ॥ **2.3.8** ॥

மீன் அமர் பொய்கை நாள் மலர் கொய்வான் ⋆
வேட்கையினோடு சென்றிழிந்த ⋆
கான் அமர் வேழம் கைய் எடுத்தலறக் ⋆
கரா அதன் காலினைக் கதுவ ⋆
ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து ⋆
சென்று நின்றாழி தொட்டானை ⋆

தேன் அமர் சோலை மாட மா மயிலைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ॥ **2.3.9** ॥

‡ மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும் ⋆
மாட மாளிகையும் மண்டபமும் ⋆
தென்னன் தொண்டையர் கோன் செய்த நன் மயிலைத் ⋆
திருவல்லிக்கேணி நின்றானை ⋆
கன்னி நன் மாட மங்கையர் தலைவன் ⋆
காமரு சீர்க் கலிகன்றி ⋆
சொன்ன சொல் மாலை பத்துடன் வல்லார் ⋆
சுகம் இனிதாள்வர் வான் உலகே ॥ **2.3.10** ॥

அடிவரவு — வில் வேதத்தை வஞ்சனை இந்திரனுக்கு இன்துணை அந்தகன் பரதன் பள்ளியில் மீனமர் மன்னு அன்றாயர்

விற்பெருவிழவும் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்